**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 11 ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.13/2026 மற்றும் இ.ம.எண்.14/2026**

**IN**

**அசல் வழக்கு எண்.20/2016**

நவநீதகிருஷ்ணன் ....மனுதாரர்/எதிரிடை கோரிக்கை வாதி/ பிரதிவாதி

/எதிர்/

காளிமுத்து ....எதிர்மனுதார்/எதிரிடை கோரிக்கை பிரதிவாதி/ வாதி

இம்மனுக்களானது 20.04.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.இரமேஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ரமேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், மனுக்கள், எதிருரைகள் மற்றும் அசல் வழக்கு கோப்பு பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**பொதுவான உத்தரவு**

மனுதாரரால் இம்மனுக்களானது, உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 151 மற்றும் கட்டளை 6, விதி 17, 18-ன்படி, இவ்வழக்கில் 27.02.2026 அன்று தீர்ப்புக்காக போடப்பட்டுள்ள வாய்தாவை ரீ-ஓபன் செய்து, சீர்திருத்த மனுவில் கண்ட சீர்திருத்த விபரப்படிக்கு இவ்வழக்கின் எதிரிடைகோரிக்கையில் சீர்திருத்தம் செய்து வழக்கினை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:37:15 +0530

மேல்நடத்திப்போக அனுமதித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.13/2026 மற்றும் இ.ம.எண்.14/2026 ன் மனுக்களின் சுருக்கம்:-</u>**

இம்மனுக்களின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், மனுதாரர் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிரிடைகோரிக்கையில் பாரா 10 ல் கடைசி பகுதியில் தட்டச்சு எழுத்து பிழையாக 220/6 என்பதற்கு பதிலாக 220/5 என தட்டச்சு செய்யப்பட்டிருந்தது என்றும், மேற்படி எழுத்து பிழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பு அந்த பிழை மனுதாரர் வழக்கு கோப்பில் வைக்கும் நகலில் சரியாக 220/6 என திருத்தம் செய்யப்பட்டிருந்தது என்றும், ஆனால் கவனக்குறைவாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் எதிரிடை கோரிக்கையில் திருத்தம் செய்யப்படாமல் 220/5 என கவனக்குறைவாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி விபரம் தற்போது நீதிமன்றத்தில் வாதுரைக்காக தயாரான போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் எதிரிடை கோரிக்கையை வாதுரையின்போது பார்வையிட்டபோதுதான் மேற்படி புல எண் தவறாக குறிப்பிடப்பட்ட விபரம் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், மேற்கண்ட தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், அது தெய்வாதீனமாக கவனக்குறைவான தட்டச்சால் ஏற்பட்டது என்றும், மேற்கண்ட எதிரிடை கோரிக்கையில் அதே பாராவில் முன்பகுதியில் மனுதாரருக்கு அந்த புல எண் எவ்வாறு மனுதாரரின் முன்பாத்தியஸ்தரான கணபதி என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்பதை குறிப்பிட்டதில் சரியாக உள்ளது என்றும், அந்த பகுதி "இந்த எதிரிடைகோரிக்கை வாதி/பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த கணபதியின் தந்தை மூத்தவர் என்பதால் மேற்படி 1 ஏக்கர் 61 சென்டில் தென்கடைசி பாகமும், அதற்கடுத்த வடபாகம் மாடனுக்கும்,

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:37:21 +0530

மேற்படி மாடனுக்கு அடுத்த வடபாகம் அடைக்கலம் என்பவருக்கும் என்று வாய்மொழியாக பாகம் செய்து கொண்டு அனுபவம் செய்து வரப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் யு.டி.ஆர். நில அளவையின்போது பாலாறு பாகமானது அவரின் மக்களான கசமுத்து, கணபதி ஆகியோர்கள் பெயரில் 220/3 புல எண்ணுக்கு பட்டா எண்.792 என்றும், அதேபோல் 220/6 ல் கண்ட சொத்தானது பாலாறு மக்களான மேற்படி இருவர்கள் பெயரில் பட்டா எண்.2700 என்றும் ஏற்பட்டு அனுபவம் செய்து வந்தனர்" என சரியான சங்கதியை குறிப்பிட்டுள்ளதாகவும், அதன்பின் தொடர்ந்து சொன்ன வாசகங்களில் அதன்பின் பாலாறு மக்களான கசமுத்துவும், கணபதியும் வாய்மொழி பாகம் செய்து கொண்டதில் மேற்படி புல எண்கள்.220/2 மற்றும் 220/5 ல் கண்ட சொத்தில் முறையே கிழக்கு பக்கம் கணபதிக்கும், அதற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்து கசமுத்துவிற்கு என்று பாகம் செய்து கொண்டு அனுபவம் செய்து வந்த நிலையில் என்பதில் தவறுதலாக புல எண்.220/6 க்கு பதிலாக தவறுதலாக புல எண்.220/5 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் அதற்கடுத்து பாரா 11 ல் பாலாறு மக்கள் பாகம் செய்து கொண்டு அனுபவித்து வந்த சொத்தை பாலாறு வாரிசான கணபதி என்பவர் அவருடைய பாக சொத்தை பொறுத்து எதிரிடை கோரிக்கை வாதி/ பிரதிவாதியான நவநீதகிருஷ்ணனுக்கு புல எண்.220/3 ல் 0.02.5 ஹெக்டேர் மற்றும் புல எண்.220/6 ல் கண்ட கிழக்கு பக்க சொத்தை மால்கண்டு 0.08.5 ஹெக்டேர் நிலத்தையும் புல எண்.220/4 ல் கண்ட கிணற்றில் பிரிவின்றி 7 ல் 1 பங்கு பாத்தியதையும் 12.11.2013 ம் தேதியில் சரியான பிரதி பிரயோஜனத்தின் பேரில் கிரையம் கொடுத்து கிரையம் கொடுத்த சொத்து சம்பந்தமான மூல அசல் ஆவணங்களை இந்த கிரையம் பெற்ற எதிரிடைகோரிக்கை வாதி/ பிரதிவாதியிடம் என்ற எதிரிடைகோரிக்கை என 11 வது பத்தியில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:37:27 +0530

கூறியுள்ள வாசகங்களில் சரியாக 220/6 ல் கண்ட கீழ்பக்க சொத்து என விபரம் சரியாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட சங்கதிகளை ஒருசேர எதிரிடை கோரிக்கை சங்கதிகளை புரிந்துகொள்வதன் மூலம் புல எண்.220/5 என்பது தட்டச்சு பிழையாக தவறாக எதிரிடை கோரிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது விளங்கும் என்றும், மேற்கண்ட புல எண்.220/5 என்பதை 220/6 என திருத்தம் செய்து கொள்வதன் மூலம் இவ்வழக்கின் வியாஜ்ஜிய மூலமோ அதுபோல் வழக்கின் தன்மையோ வழக்கின் பரிகாரமோ எவ்விதத்திலும் மாறுதல் அடைவதில்லை என்றும், உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றத்தால் நிலைநிறுத்தப்பட்ட சட்டகோட்பாட்டின்படி வழக்கின் சங்கதிகளும் ஆவண சங்கதிகளும் ஒருசேர முழுமையாக சேர்த்துதான் அர்த்தமும் நோக்கமும் புரிந்துகொள்ள வேண்டுமென்பது சட்டநிலைபாடு இருப்பினும் பின்குழப்பங்களை தவிர்ப்பதற்கு தற்போது இந்த சீர்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், இல்லாதுபட்சம் இந்த எதிரிடை கோரிக்கையான வாதியான மனுதாரருக்கு அளவிட முடியாத கஷ்ட, நஷ்டங்களும் இழப்பும் ஏற்படும் என்றும், ஆகையால், இவ்வழக்கில் 27.02.2026 அன்று தீர்ப்புக்காக போடப்பட்டுள்ள வாய்தாவை ரீ–ஓபன் செய்து, சீர்திருத்த மனுவில் கண்ட சீர்திருத்த விபரப்படிக்கு இவ்வழக்கின் எதிரிடைகோரிக்கையில் சீர்திருத்தம் செய்து வழக்கினை மேல்நடத்திப்போக அனுமதித்து உத்தரவிடக்கோரி இம்மனுக்கள் மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2) **இ.ம.எண்.14/2026 ல் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு இ.ம.எண்.13/2026 ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–**

மனுதாரரின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், பிரஸ்தாப வழக்கு 10 ஆண்டு காலமான

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.11 18:37:34 +0530

இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்துவருவதாலும் எதிர்மனுதாரர் மூத்த குடிமகன் என்பதாலும் மனுதாரரின் மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், இருதரப்பு சாட்சியங்களும் வாதுரைகளும் முடிவுற்று தீர்ப்பிற்காக வாய்தா ஏற்பட்டுள்ள தருனத்தில் பிரதான வழக்கை காலம் தாழ்த்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரின் மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர் அவர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் புல எண்.220/5 என்று இருப்பதை 220/6 என்று சீர்திருத்தம் செய்ய கோரியுள்ளார் என்றும், உண்மையில் பி.வா.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும்பொழுது மேற்படியார் புல எண்.220/6 ஐ கிரையம் வாங்கவில்லை என்றும் 220/6 க்கும் பிரதிவாதிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றும், அதேபோல் எதிர்கோரிக்கையில் பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தருக்கு புல எண்.220/2 மற்றும் 5 ல் கண்ட சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது உண்மைதான் என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேற்கண்டவாறு ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்து பின்னீடு மேற்படி ஒப்புக்கொண்ட சங்கதிகளை Get Over செய்யும் வகையில் சீர்திருத்தம் செய்ய இயலாது என்றும், மனுதாரரின் மனு அனுமதிக்கப்பட்டால் மனுதாரரிடம் பெறப்பட்டுள்ள ஒப்புதல் வாக்குமூலம் பயனற்று போய்விடும் அதோடு மட்டுமல்லாமல் விடுபட்ட சாட்சிகளை நிரப்புவதற்கு ஏதுவாகிவிடும் என்றும், சீர்திருத்தப்பட்ட உரிமையியல் நடைமுறை சட்டப்படி விசாரணை ஆரம்பிக்கப்பட்ட பின்னீடு சட்டப்படி சீர்திருத்தம் செய்துகொள்ள இயலாது என்றும், மேலும் எதிர்வழக்குரை அல்லது எதிர்கோரிக்கையில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை சீர்திருத்தம் செய்ய இயலாது என்றும், மனுதாரரால் இந்நீதிமன்றத்தில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:37:42 +0530

01.07.2016 அன்று எதிர்கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் தற்போது 10 ஆண்டு கழித்து பிரஸ்தாப சீர்திருத்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரரின் மனு சட்டதிட்டங்களுக்கும் இயற்கை நீதிக்கும் முரணானது என்றும், எனவே இம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுக்களானது, இவ்வழக்கில் 27.02.2026 அன்று தீர்ப்புக்காக போடப்பட்டுள்ள வாய்தாவை ரீ–ஓபன் செய்து, சீர்திருத்த மனுவில் கண்ட சீர்திருத்த விபரப்படிக்கு இவ்வழக்கின் எதிரிடைகோரிக்கையில் சீர்திருத்தம் செய்து வழக்கினை மேல்நடத்திப்போக அனுமதித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கின் எதிரிடை கோரிக்கையானது வாதிக்கு கிரையம் கொடுத்த கணேசன் என்பவர் கருப்பாயி என்பவரிடம் கிரையம் பெற்றதாக பிரஸ்தாபிக்கும் 15.09.2009 ம் தேதிய கிரைய ஆவணம், வாதி கணேசனிடம் கிரையம் பெற்றதாக பிரஸ்தாபிக்கும் 03.06.2013 ம் தேதிய கிரைய ஆவணங்களை செல்லாத ஆவணம் என விளம்புகை செய்யக்கோரியும், எதிர்கோரிக்கை தபசில் சொத்துக்கள் குறித்து நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இம்மனுக்களின் மனுதாரரால், மனுதாரர் அசல் வழக்கில் தாக்கல்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.11 18:37:50 +0530

செய்துள்ள எதிரிடைகோரிக்கையில் பாரா 10ல் கடைசி பகுதியில் தட்டச்சு எழுத்து பிழையாக 220/6 என்பதற்கு பதிலாக 220/5 என தட்டச்சு செய்யப்பட்டிருந்தது என்றும், மேற்படி எழுத்து பிழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பு அந்த பிழை மனுதாரர் வழக்கு கோப்பில் வைக்கும் நகலில் சரியாக 220/6 என திருத்தம் செய்யப்பட்டிருந்தது என்றும், ஆனால் கவனக்குறைவாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் எதிரிடை கோரிக்கையில் திருத்தம் செய்யப்படாமல் 220/5 என கவனக்குறைவாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி விபரம் தற்போது நீதிமன்றத்தில் வாதுரைக்காக தயாரான போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் எதிரிடை கோரிக்கையை வாதுரையின்போது பார்வையிட்டபோதுதான் மேற்படி புல எண் தவறாக குறிப்பிடப்பட்ட விபரம் மனுதாரருக்கு தெரியவந்தது என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

8) மனுதாரின் மனுக்களை மறுத்து, எதிர்மனுதாரர் தரப்பில் பிரஸ்தாப வழக்கு 10 ஆண்டு காலமான இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்துவருவதாலும் எதிர்மனுதாரர் மூத்த குடிமகன் என்பதாலும் மனுதாரரின் மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், இருதரப்பு சாட்சியங்களும் வாதுரைகளும் முடிவுற்று தீர்ப்பிற்காக வாய்தா ஏற்பட்டுள்ள தருனத்தில் எதிர்வழக்குரையில் புல எண்.220/5 என்று இருப்பதை 220/6 என்று சீர்திருத்தம் செய்ய கோரியுள்ளார் என்றும், உண்மையில் பி.வா.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும்பொழுது மேற்படியார் புல எண்.220/6 ஐ கிரையம் வாங்கவில்லை என்றும் 220/6க்கும் பிரதிவாதிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றும், அதேபோல் எதிர்கோரிக்கையில் பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தருக்கு புல எண்.220/2 மற்றும் 5ல் கண்ட சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது உண்மைதான் என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியம்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.11 18:37:58 +0530

அளித்துள்ளார் என்றும், மனுதாரரின் மனு அனுமதிக்கப்பட்டால் மனுதாரரிடம் பெறப்பட்டுள்ள ஒப்புதல் வாக்குமூலம் பயனற்று போய்விடும் மேலும் எதிர்வழக்குரை அல்லது எதிர்கோரிக்கையில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை சீர்திருத்தம் செய்ய இயலாது என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

9) மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கையை முழுமையாக பரிசீலனை செய்தபோது, பத்தி 10–ல் ஒரு இடத்தில் மட்டும் புல எண்.220/5 என குறிப்பிடப்பட்டுள்ளதோடு, அதே பத்தியின் முந்தைய மற்றும் பிந்தைய பகுதிகளிலும், குறிப்பாக பத்தி 11–லும் கூட புல எண்.220/6 என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே எதிர்கோரிக்கையை ஒட்டுமொத்தமாக வாசிக்கும்போது, எதிர்கோரிக்கை பத்தி 10–ல் ஒரு இடத்தில் மட்டும் புல எண்.220/5 என குறிப்பிடப்பட்டிருப்பது தட்டச்சுப் பிழையால் ஏற்பட்டுள்ளது என்பது புலனாகிறது.

10) மனுதாரர் கோரியுள்ள சீர்திருத்தம் மூலம் புதிய சொத்து எதிர்கோரிக்கையில் சேர்க்கப்படவில்லை. புதிய உரிமை கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை. ஏற்கனவே கூறப்பட்டுள்ள வழக்கின் அடிப்படை சங்கதிகள், வழக்குமூலம் மற்றும் கோரப்பட்டுள்ள பரிகாரங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. எனவே கோரப்படும் சீர்திருத்தம் வழக்கின் தன்மையையோ அல்லது எதிர்கோரிக்கையின் அடிப்படை அமைப்பையோ மாற்றுவதாக இல்லை.

11) மேலும், எதிர்கோரிக்கையின் பிற பத்திகளிலும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களிலும் புல எண்.220/6 என்பதே தொடர்ந்து குறிப்பிடப்பட்டிருப்பதால், மனுதாரரின் நோக்கம் ஆரம்பம் முதலே புல எண்.220/6 தொடர்பாகவே இருந்துள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்நிலையில் ஒரு இடத்தில் ஏற்பட்டுள்ள தவறான புல எண் விபரத்தை திருத்த அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாகும்.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:38:06 +0530

12) மேலும், இந்நிலையில் இந்நீதிமன்றமானது, " Rani Vs. Dhanalakshmi Ammal & others, 2018(3) TNLJ Civil 598" என்ற முன்தீர்ப்பினை பார்வையிட்டபோது மேற்படி வழக்கில் நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*"14) The power of the Court to allow the amendment is very wide and can be exercised at any stage of the proceeding. The Court should adopt a liberal approach in allowing the amendment and the amendment should not be disallowed on hyper technical grounds. The power is entirely discretionary to be used judiciously on a consideration of the facts and circumstances of each case. The rule allows at any stage all amendments which satisfy the two conditions (a) of not working injustice to the other side, and(b) of being necessary for the purpose of determining the real questions in controversy between the parties. If the amendment changes the cause of action or introduces a new case, the amendment should not be allowed.*

*15) As for the first part of the provision, the law permits a party to amend his pleadings which are essential for determining the real question in controversy between the parties and as far as this part is concerned, the Courts are to liberally approach the matter."*

13) மேற்கண்ட நமது மாண்புமிகு உயர்நீதிமன்ற முன்தீர்ப்பின்படி ஒரு வழக்கின் விசாரணை எந்த கட்டத்திலிருந்தாலும் வழக்குரையில் திருத்தம் செய்வதற்கான அனுமதியை வழங்க கூடிய அதிகாரம் நீதிமன்றத்திற்குள்ளது. வழக்குரையில் திருத்தம் செய்வதற்கு அனுமதியளிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்களை எளிமையான அணுகுமுறையில் நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டும். அந்தந்த வழக்கு சங்கதிகள் மற்றும் சூழ்நிலையின் அடிப்படையில், தனக்குள்ள உளத்தேர்வு அதிகாரத்தை நீதிமன்றம் பயன்படுத்த

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:38:14 +0530

வேண்டும். அந்த திருத்தமானது a) மறு தரப்பினருக்கு அநீதியை ஏற்படுத்தாது மற்றும் b) வழக்கு தரப்பினர்களுக்கிடையே எழுந்துள்ள பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு அந்த திருத்தம் அவசியமானது என்கிற இரண்டு காரணங்களின் அடிப்படையில் வழக்குரையில் திருத்தம் செய்வதற்கான அனுமதியை அந்த வழக்கு எந்த கட்டத்தில் இருந்தாலும் நீதிமன்றம் அனுமதிக்கலாம் என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

14) எதிர்மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள ஆட்சேபனைகள் விசாரணையின்போது மற்றும் இறுதி முடிவெடுக்கும் நிலையில் பரிசீலிக்கத்தக்கவையாகும். அவை மட்டுமே சீர்திருத்த மனுவை நிராகரிக்க போதுமான காரணங்களாக அமையாது. மேலும் இச்சீர்திருத்தத்தால் எதிர்மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத பாதிப்பு எதுவும் ஏற்படப்போவதில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15) ஆகவே, வழக்கின் உண்மையான பிரச்சனையை முழுமையாக தீர்மானிப்பதற்கும், தட்டச்சுப் பிழையால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய குழப்பங்களை தவிர்ப்பதற்கும், மனுதாரர் கோரியுள்ள சீர்திருத்தம் அனுமதிக்கப்பட வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

16) இருப்பினும், மனுதாரரால் இம்மனுவானது மிகவும் காலதாமதமாக அசல் வழக்கு தீர்ப்புரைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் எதிர்மனுதாரருக்கு மனுதாரரால் ஏற்பட்ட கஷ்ட, நஷ்டத்தை கருத்தில்கொண்டு இம்மனுவானது நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

17) **<u>இறுதியாக:–</u>**

**<u>இ.ம.எண்.13/2026</u>**

இம்மனுவானது ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:38:22 +0530

தொகையினை எதிர்மனுதாரருக்கு நேரடியாக 15.06.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 15.06.2026.

**இ.ம.எண்.14/2026**

இம்மனுவானது ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை எதிர்மனுதாரருக்கு நேரடியாக 15.06.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 15.06.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 11 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:38:29 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-**

– இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:38:35 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**
I.A.No.13/2026 and
I.A.No.14/2026
in
O.S.No.20/2016
**உத்தரவு (Draft / Fair)**

**நாள் : 11.06.2026**